**அயகம பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 02 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அயகம பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 135,475 தொகையான செலவினங்களுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான செலவினங்கள் ரூபா 135,475 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) கொங்கிரீட் கல் செயற்திட்டத்தின் உற்பத்தி முன்னைய ஆண்டின் போது கடன் அடிப்படையில் விற்பனையிலிருந்து பெற்ற ரூபா 397,822 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) சபையால் முன்னைய ஆண்டுகளின் போது கணக்கீடு செய்யப்பட்டிராத வருமான மற்றும் செலவினக் கணக்கு விடயங்களும் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் ஒவ்வொரு ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏதேனும் ஓர் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நம்பிக்கை வைக்க முடியாதிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளினதும் பயன்பாட்டுப் பதிவேடுகளின் படியான மீதிகளினதும் வேறுபாடு ரூபா 11,084,686 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்கியிராமை |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>நிதிப் பிரமாணம் 571 | 2011 ஆம் ஆண்டிடு முதல் பிடித்து வைக்கப்பட்டுள்ள 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 14,768,881 தொகையான வைப்புக்கள் வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது தொடர்ந்தும் பிடித்துவைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அமைச்சின் செயலாளரின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி | தொலைபேசி மற்றும் தொடர்பாடல் கம்பங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படுகையில் வர்த்தமானியின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,360,166 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,443,029 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| | '000 | '000 | '000 |
| வீதவரியும் வரியும் | 495 | 417 | 284 |
| வாடகை | 2,723 | 2,627 | 178 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 465 | 341 | 17 |
| ஏனைய வருமானம் | 4,029 | 12,449 | 1,297 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---------------------------------------------------------

மீளாய்வாண்டில் சேவைக்கான கட்டண வருமானம் தவிர்ந்த வீதவரியும் வரியும், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், ஆணைச்சீட்டு மற்றும் தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானங்களின் மதிப்பிடப்பட்ட வருமானம் சேகரித்த வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் சேகரித்த வருமானம் மதிப்பிடப்பட்ட அளவைப்பார்க்கிலும் 0.8 சதவீதத்திலிருந்து 55.6 சதவீதம் வரை குறைவைக் காண்பித்தது.

### 2.2.3 வீதவரி

----------

நிலுவையான வீதவரியாக மீளாய்வாண்டின் இறுதியில் 422 வரிவிதிப்பாளர்களிடமிருந்து ரூபா 60,353 தொகையான வீதவரி அறவிடப்படுவதற்கிருந்ததுடன் நிலுவையான வீதவரி அறவிடப்படுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள் தடைசெய்தல் போன்றி முறையான நடவடிக்கை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள வரி அறவிடப்பட வேண்டிய வியாபாரங்களை இனங்காண்பதற்காக வருடாந்த மெய்மையாய்வொன்று கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் அளவிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தற்போதும் வருமானத்தைச் செலுத்தும் நிறுவகங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வருமானப்பதிவேடொன்று பேணப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட நிலையான அறிவித்தல் பலகைகளுக்குரித்தான விபரமான பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு உரித்தான தற்காலிக அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தலுக்காக சபைக்கு எவ்வித வருமானமும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) நீர்ச் செயற்திட்டத்தில் 345 நீர் பயன்பாட்டாளர்களால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பல வருடகாலமாக நிலுவையாகக் காணப்படும் ரூபா 112,241 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த நீதிமன்றத் தண்டப் பணமான ரூபா 70,083 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2014 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான முத்திரைக் கட்டணப் பட்டோலை பெற்றுக்கொள்ளப்பட்டு குறித்த வருமானம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் பல வருட காலமாக செயற்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் கற்கள் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 1,400,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உற்பத்தியொன்று மேற்கொள்ளப்படாது சபையால் செயற்படுத்தப்பட்ட 10 வீதிச் செயற்திட்டங்களிற்காக 85951 கொங்கிரீட் கற்களின் கொள்வனவிற்காக ரூபா . 2,707,464 தொகையும் அவற்றைக் கொள்வனவு செய்தமைக்காக ரூபா 300,834 ஆக மீளாய்வாண்டின் போது ரூபா 3,008,298 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் கொங்கிரீட் கல் உற்பத்தி இயந்திரம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது கைவிடப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) சபைக்கு உரித்தாக 07 மயானங்கள் உள்ளதுடன் சபையின் உரிமைகோரும் அத்தகைய 12 மயானங்கள் தொடர்பாக அளவீடுகள்

தொடர்பாக தீர்க்கப்பட்டு முறையான வகையில் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுக்கவில்லை. அம் மயானங்கள் தொடர்பாக முறையான விபரமும் சபையிடம் இருக்கவில்லை.

(இ) சபையிடம் உள்ள நிலையான சொத்துப் பதிவேடு முறையான வகையில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஊழியர் கடன்

சபைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களால் ரூபா 25,200 தொகையான நிலையான கடன் மீதி ஒன்று கணக்காய்வுத் தினம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இரத்தினபுரி உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் ஏபீஎல் 36/2007 ஆம இலக்க வழக்குத் தொடர்பாக எவ்வித தகவல்களும் சபையிடம் இல்லாதிருந்த போதிலும், அவ் வழக்கிற்காகத் தோற்றுவதற்காக சட்டத்தரணிகளின் கட்டிடமாக ரூபா 25,000 தொகை மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 வெளிநாட்டுப் பயணச் செலவினங்கள்

2014 நவம்பர் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தனியார் நிறுவகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட 05 நாள் வெளிநாட்டுப் பயணத்திற்காக ஓர் பயணிக்கு ரூபா 98,000 தொகை தனியார் நிறுவகம் ஒன்றிற்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதித் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி முறையாக லீவு அங்கீகாரத்தில் அமைய லீவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதற்கு மாறாக ரூபா 39,750 தொகையான அமையப் படிப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய ஓர் கடிதம் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு உள்நாட்டு ரீதியாகப் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பாக ஓர் அறிக்கை பயிற்சி முடிவுற்று ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய ஓர் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி நிறுவகத் தலைவர் அல்லது பிரதித் தலைவர் அல்லது பயணி ஒருவர் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படின் குறித்த அமைப்பு அல்லது வெளிநாட்டு அரச அல்லது வெளிநாட்டு நிறுவனம் இதற்காகச் செலவிடப்படும் சகல செலவினங்கள் மற்றும் வசதிகளை ஏற்க வேண்டிய போதிலும் அச் சுற்றறிக்கை ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது மேற்குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.5 விளைவற்றதும்/ குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

மோட்டார் கிரேடர் மற்றும் LK – 9601 ஆம் இலக்க லேலண்ட் வகையிலான டிபர் வண்டி சபைத் தேவைப்பாடுகளுக்கு இயங்காமை மற்றும் பிரதேச சபை வீதியில் ஓடுவதற்கு ஏற்ற வீதி போதுமான வகையில் இன்மையால் கணக்காய்வுத் தினம் வரையிலும் போதுமான பயன்பாடின்றி சபை வளாகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

“ ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை” நிகழ்ச்சியின் கீழ் கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகளில் செயற்படுத்தப்பட்ட அயகம கம்பொக்காவ நீர் செயற்திட்டத்திற்காக தொழில் நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ரூபா 98,000 பெறுமதியான உடன்படிக்கை 2014 யூன் 20 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் தாங்கியில் கொங்கிரீட் சுவரில் உள்ள ஒரு துளையிலிருந்து நீர் கசிவதாகவும், நீர் எதிர்ப்பு (Water Resistant) பயன்படுத்தப்பட்டிராமையால்

கொங்கிரீட் சுவர்களின் வெளிப்புறத்தில் நீர் தேங்கியிருந்தமை 2015 மே 13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

மதிப்பீட்டின் படி, GI குழாய்களின் மூலம் கட்டமைப்பைத் தயாரிக்காது ஆதாரமாக நடுவில் GI குழாய் ஒன்றை மாத்திரம் பயன்படுத்தி வலை கவசம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மதிப்பீட்டு அறிவுறுத்தலின் படி, அச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மரப்பட்டிகள் பயன்படுத்தப்பட்டு அவ் வலைக் கவசம் தற்காலிகமாக தாங்கியிலிடப்பட்டிருந்ததுடன் நிரந்தரமாக வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்